III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.No.249/2020

Deposition of witness for the Respondent / RW 2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 07-03-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : மலர்செல்வி | Village | : |
| Father's / Husband's Name | : அன்பரசு | Calling | : |
| Age | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 3 வது எதிர்மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்தியப் பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) வாரிசு சான்றிதழ் எ.ம.த.சா.ஆ.4
2) விவாகரத்து நகல் எ.ம.த.சா.ஆ.5
3) மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல் எ.ம.த.சா.ஆ.6
4) மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக நகல் எ.ம.த.சா.ஆ.7
5) மனுதாரர் மலர்செல்வி மதுரவாயல் வட்டாட்சியருக்கு அனுப்பிய கடித நகல் எ.ம.த.சா.ஆ.8
6) மதுரவாயல் வட்டாட்சியர் கடிதம் பெற்றதற்கான ஒப்புகை அட்டை எ.ம.த.சா.ஆ.9
7) மலர்செல்வி முதலமைச்சர் நிவாரண நிதி பெற்றதற்கான காசோலை நகல் எ.ம.த.சா.ஆ.10
8) 10.05.2019 ல் நாகாத்தம்மன் கோயிலில் திருமணத்திற்கு பணம் கட்டிய ரசீது எ.ம.த.சா.ஆ.11
9) ஜெயலட்சுமி விவேக் திருமண பத்திரிக்கை (14.06.2019) எ.ம.த.சா.ஆ.12
10) அறங்காவலர் குழு நாகபுற்று கன்னியம்மன் கோயிலுக்கு அனுப்பிய அறிவிப்பு எ.ம.த.சா.ஆ.13
11) ஒப்புகை அட்டை எ.ம.த.சா.ஆ.14

12) ஜெயலட்சுமிக்கு அனுப்பி கடிதம் (cover returned) எ.ம.த.சா.ஆ.15

13) மீனாட்சி கல்லூரிக்கு அனுப்பிய கடிதம் எ.ம.த.சா.ஆ.16

14) ஒப்புகை அட்டை எ.ம.த.சா.ஆ.17

எ.ம.த.சா.ஆ.4, 11 மற்றும் 12 ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் என்னுடைய மகன் நடேசன் நகர், ஆலப்பாக்கம், மதுரவாயலில் குடியிருந்து வந்தார். அது வாடகை வீடு. வீட்டிலிருந்து ஆலப்பாக்க ரோட்டில் போய் கொண்டிருந்தபொழுது தான் விபத்து சம்பவம் நடைபெற்றது. அந்த விபத்து சமயத்தில் நான் எனது சொந்த ஊரான ஜெயங்கொண்டத்தில் இருந்தேன். விபத்து பற்றிய புகாரை நான் கொடுக்கவில்லை. நான் காரியம் முடிந்து 16 வது நாள் காவல் நிலையம் வந்து கேட்டபொழுது ஜெயலட்சுமி என்பவர் ஏற்கனவே புகார் கொடுத்ததாக சொன்னார்கள். ஜெயலட்சுமி கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை நான் படித்து பார்த்திருக்கின்றேன். அந்த புகாரில் ஜெயலட்சுமியின் கணவர் விவேக் என்றும் அவர் 18A, ராதா அப்பார்ட்மெண்ட், நடேசன் நகர், 1 வது தெரு, ஆலப்பாக்கம் மெயின் ரோடு, மதுரவாயல், சென்னை-95 ல் குடியிருப்பதாக கூறப்பட்டிருக்கின்றது. அந்த புகாரில் ஜெயலட்சுமியின் கணவர் விவேக் என்று கண்டிருக்கின்றது என்றால் சரிதான். எனது மகன் விவேக்கின் முதல் மனைவியின் பெயர் சர்மிளா. அவர்களுக்கு சதுர்பூஜா என்ற ஒரு மகள் இருக்கின்றார். அவர் தான் இந்த மனுவின் சதுர்பூஜாவின் கார்டியன் என்ற முறையில் 2 வது மனுதாரர். எனது மகனுக்கும் சர்மிளாவுக்கும் இடையே நீதிமன்றத்தின் மூலமாக 10.01.2020 ல் மனமொத்த விவாகரத்து பெற்றுவிட்டார். புகார் கொடுத்த ஜெயலட்சுமி இந்த மனுவில் முதல் மனுதாரர். 2 வது மனுதாரரும் அவரது குழந்தை சதுர்பூஜாவும் 2 வது மனுதாரரின் தாய் தந்தையோடு சென்னையில் குடியிருந்து வருகின்றார்கள். இந்த மனுவை ஜெயலட்சுமியும், சதுர்பூஜாவின் பாதுகாவலர் என்ற முறையில் சர்மிளாவும் சேர்ந்து தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால் சர்மிளா ஜெயலட்சுமியோடு

சேர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை. இந்த மனுவில் என்னை 3 வது எதிர்மனுதாரராக மனுவை தாக்கல் செய்யும்பொழுதே சேர்த்திருக்கின்றார்கள். நான் தனியாக 2021ல் ஜெயங்கொண்டம் நீதிமன்றத்தில் MCOP.53/2021 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுவில் நான் என்னுடைய மருமகளின் அனுமதியில்லாமல் சதுர்பூஜாவின் பாதுகாவல் என்று என்னை நானே கூறி வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சர்மிளாவின் அனுமதியோடு தான் அந்த மனுவை தாக்கல் செய்தேன். நான் என்னுடைய பேத்தி சதுர்பூஜாவின் சட்டப்படியான பாதுகாவலர் இல்லை என்று சொன்னால் எனது மருமகள் விவாகரத்து பெற்றுவிட்ட படியால் நான் தான் எனது பேத்தியின் சட்டப்படியான பாதுகாவலர். மனுதாரர்கள் தரப்பில் ம.த.சா.ஆ. 5 மற்றும் 6 ஆக தாக்கல் செய்திருக்கின்ற இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழில் ஜெயலட்சுமியின் பெயரும் வாரிசாக காட்டப்பட்டிருக்கின்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சென்னையில் இருக்கின்ற மாலா என்பவர் எனக்கு சித்தி மகள். அவருடைய கணவர் மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்து வருகின்றார். எனது சித்தி மகளின் கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி ஜெயலட்சுமியின் பெயரை விட்டுவிட்டு நான் வாரிசு சான்றிதழ் பெற்று இருக்கின்றேன் என்றால் சரியல்ல. அரசால் கொடுக்கப்பட்ட ரூ.1 லட்சம் பணத்தை பெறுவதற்கு நான் சர்மிளாவிடம் No objection வாங்கியிருக்கின்றேன். நான் பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் அப்படி no objection எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது உறவினரின் செல்வாக்கால் தான் அரசாங்கம் கொடுத்த இழப்பீடை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் ஜெயலட்சுமியை வாரிசு இல்லை என்று சொல்லுகின்ற நிலையில் எதற்காக ஜெயலட்சுமியை நான் தாக்கல் செய்த மனுவில் 3 வது எதிர்மனுதாரராக சேர்த்திருக்கின்றேன் என்றால் அவர் தனியாக இழப்பீடு கோரும் மனுவை தாக்கல் செய்திருந்ததால் நான் அவரை எதிர்மனுதாரராக சேர்த்திருந்தேன். நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்ற இழப்பீட்டு மனுவை தெரிந்துகொண்டே எதற்காக தனியாக ஒரு இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்தேன் என்றால் நான் என்னுடைய வயது காரணமாகவும் எனது சொந்த ஊர் ஜெயங்கொண்டம் என்பதாலும்

என்னுடைய சொத்துக்கள் அங்கு இருப்பதாலும் அது என்னுடைய பூர்வீக ஊர் என்பதாலும் என்னுடைய மகனின் ஆதார் அங்கு இருந்ததாலும் ஜெயங்கொண்டத்தில் நான் மனுவை தாக்கல் செய்தேன். ஜெயலட்சுமியின் வாரிசு சான்றிதழுக்கு நான் ஆட்சேபனை தெரிவித்திருக்கின்றேன். அவர்கள் ரத்து செய்தார்களா என்று எனக்கு தெரியாது. என்னை விசாரிக்கவும் இல்லை. அந்த வாரிசு சான்றிதழ் உண்மையானது என்பதால் தான் நிருவாக தரப்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விவேக்கின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கின்றேன். ஜெயலட்சுமி தாக்கல் செய்திருக்கின்ற இறப்பு அறிக்கையில் அவர் தான் விவேகின் மனைவி என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் அவர் எல்லா ஆவணங்களையும் பொய்யாக வாங்கியது போல் இதனையும் பொய்யாக வாங்கியிருக்கின்றார். நான் தாக்கல் செய்திருக்கின்ற எ.ம.த.சா.ஆ.11 மற்றும் 12 ஆவணங்களுக்கும் ஜெயலட்சுமிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் 10.01.2020 ல் மனமொத்த விவகாரத்து பெற்ற பிறகு தான் ஜெயலட்சுமியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் எனது மகனின் திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்திருக்கின்ற நிலையில் பதிலுரையில் திருமணம் ஆகவில்லை என்று கூறியிருப்பதில் எது சரியானது என்றால் ஜெலட்சுமி எனக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பி வைத்ததை வைத்து நான் அதனை இம்மனுவில் தாக்கல் செய்திருக்கின்றேன். எனக்கு வினோத்குமார் என்ற இன்னொரு மகன் இருக்கின்றார். நான் ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நகல் பரிசோதகராக பணிபுரிந்து 2025 ஆண்டு மே மாதம் பணி நிறைவு பெற்றுவிட்டேன். எனக்கு வருமானம் இருக்கின்றது என்றாலும், எனது மற்றொரு மகனின் வருமானம் இருப்பதால் நான் இழப்பீடு பெற முடியாது என்றால் சரியல்ல. நான் இறந்துபோன என்னுடைய மகனை சார்ந்து இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 மனுதாரர்கள் விவேக்கின் வருமானத்தை சார்ந்து இருந்தார்கள் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி.**

என்னுடைய மகன் இறந்தபோன கால கட்டத்தில் தனியாக தான் வாழ்ந்து வந்தார்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பவத்தின்போத என்னுடைய மகன் அவராகவே விழுந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் சரியல்ல. போலிசார் எடுத்த சிசிடிவி புட்டேஜ் விபத்து குறித்து உள்ளது. விபத்து பதிவேட்டில் எந்த வண்டி இடித்தது என்று குறிப்பிடவில்லை என்றால் அந்த நேரத்தில் தெரியாது பின்னிட்டு போலிசார் கண்டுபிடித்தார்கள். இந்த விபத்து சம்பவம் என் மகனின் கவனக்குறைவால் தான் நடைபெற்றது என்றால் சரியல்ல. எனது மகன் தானாகவே கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2 ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடப்பாடுடையவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்பவத்தினால் எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.த.சா.ஆ.16 ஆவணத்தில் எனது மகன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகபட்டிருக்கின்றேன் என்று சொன்னால் எனது மகன் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு எதிரே வந்த வாகனத்தை ஓட்டி வந்த நபர் வேண்டுமென்றே இடித்தது போல் உள்ளதால் நான் சந்தேகப்பட்டு மீனாட்சி காலேஜ்க்கு இது போன்ற புகாரை கொடுத்தேன். நான் சொல்வது போல இது விபத்து சம்பவமே கிடையாது என்றால் சரியல்ல.

**மனுதாரர்கள் தரப்பில் மறு குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படுகின்ற 3 போட்டோகளிலும் இருப்பது நான்தான். முதல் போட்டோவில் உள்ள திருமண புகைப்படம் என்னுடைய மூத்த மகனுடையது. மற்ற போட்டோகளில் வெள்ளை சட்டை அணிந்து தாடி வைத்திருப்பர் என்னுடைய இளைய மகன் விவேக். இந்த புகைப்படங்கள் என்னுடைய மூத்த மகன் திருமணத்தின்போது எடுக்கப்பட்டவை. இந்த போட்டோவில் எனது இரண்டாவது மகனோடு அமர்ந்திருப்பவர்தான் ஜெயலட்சுமி. இந்த போட்டக்கள் (எண்ணம்-3) **ம.த.சா.ஆ.36**.

**<u>3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மறு விசாரணை</u>**

இந்த போட்டோக்கள் என்னுடைய மூத்த மகனின் திருமணத்தின்போது வருகை புரிந்திருந்த எனது இளைய மகன் நண்பர்களுடன் போட்டோ எடுத்துக்கொண்டேன்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**